சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு—கரு.

உ

திருச்சிற்றம்பலம்.

ஞானாமிர்தக் கட்டளை

Published by
The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Ltd.,
Tinnevelly & Madras.

1923

Price As. 4.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு—கரு.

உ

திருச்சிற்றம்பலம்.

ஞானாமிர்தக் கட்டளை

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட்
துந்துபி௵ தை௴

Published by

The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited,

:· *Tinnevelly and Madras.* :·

பதிப்புரை

சைவசித்தாந்த சமயத்திற் கொப்பத் தத்துவப் பாகுபாடுகளையும், அவற்றின் இயல்புகளையும் அங்கையி னெல்லி யென்ன இனிது விளக்கும் இவ்வருமந்த நூல் ஏனைக் கட்டளைகளிற் சிறந்து நிற்பதென இதற்கு முன் மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திரிகை வாயிலாக இதனை வெளியிட்ட திருவாளர் மு-ரா-சுப்பிரமணிய கவிராயரவர்கள் எழுதிய துண்மையே யாம். கவிராய ரவர்கள் ஏட்டிற் கண்டவாறே வழுஉக்கள் களையாது அச்சிட்டமையின் அவற்றைத் திருவாளர் வா-மகாதேவ முதலியா ரவர்களைக்கொண்டு கூடியவாறு களைவித்து யாம் அச்சிட்டனம். இந்நூலின் அருமைகூறி அதனைப் பதிப்பிக்குமாறு எம்மைத் தூண்டிப் பல சீர்திருத்தங்களுங் குறித்து உபகரித்த திருவாளர் - S. அநவரதவிநாயகம் பிள்ளை எம். எ., எல். டி. அவர்களுக்குப் பெரிதுங் கடமைப் பட்டுள்ளோம்.

திருநெல்வேலி,
11-2-1923. } சைவ சித்தாந்தக் கழகத்தார்.

Printed by C. Muniswamy Mudaliar and Sons.
306 Linga Chetti Street, G. T., Madras

உ

சிவமயம்.

ஞானாமிர்தக்கட்டளை

பதி, பசு, பாசங்களுக் கிலக்கணங் கூறுவாம்:

பதி சுதந்தரஞான முடைமையாலும், பசுக்கள் சுதந்தர மில்லாதவைகளாதலாலும், பாசங்கள் சடமா யிருக்கையாலும், முதலிற் பதிக்கும், இரண்டாவது பசுக்களுக்கும், மூன்றாவது பாசங்களுக்கும் இலக் கணங் கூறத் தொடங்கி, பதியிலக்கணங் கூறப்படு கின்றது.

பதியிலக்கணம்

பதி சொரூபமென்றும், தடத்தமென்றும் இரு வகைப்படும்.

சொரூபமாவது - முத னடு விறுதியில்லாததாய், தூலசூக்குமசூனிய ரூப மில்லாததாய், குணங்குறி யில்லாததாய், ஒன்றாய், அசலமாய், அகண்டாகார

சச்சிதானந்த பரிபூரண சோதியாய், பஞ்சகிருத்தி யத்திற் கதிதப்பட்டு நின்மலவடிவாய் விளங்குவது.

இனித் தடத்தமாவது - சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகமென்னும் பஞ்சகிருத்தியங் களைப் பண்ணுவதாம்.

பதியாகிய சிவத்தினிடத்து அக்கினியி லுஷ்ணம் போலப் பிரிவற்றிருக்குஞ் சத்தியானது நித்தமாய்,ஒன் ருய், இச்சாஞானக்கிரியா சொரூபமாயிருக்கும். இது காரியபேதத்தினாலே பரைமுதலாக அனேக பேதப் படும். சத்தி பேதத்தினாலே, சிவனுஞ் சத்தன், உத்யுக் தன், பிரவிருத்தனென மூவகையாய்ப் பேதப்படுவன்.

சத்தனென்பவன் காரியத்தைப் பண்ண வுத் யோகியாமலும் காரியம் பண்ணத் தொடங்காமலு மிருக்கிற சத்திமாத்திரமா யிருக்கிறவன்; இவன் சத்தி கலைகளுடன் கூடியிருக்கிறவனாகையால் நிட்களனா யிருப்பன். இவனுக்கு ஞானமாத்திரமே திருமேனி. இவனுக்கு இலய னென்றும், சத்தனென்றும் பெயர்.

இனி, உத்யுக்தனாவான் காரியம் பண்ண வுத் யோகிக்கிற சத்தியுடையவன்; காரியம் பண்ண வுத் யோகிக்கிறபொழுது ஞானக் கிரியா சத்திக ளொப்பில் உண்டானவன்; பரை ஆதி இச்சை ஞானம் கிரியை யென்னும் பஞ்சசத்திகள் சுத்தமாயையிலே பதிந்த பொழுதுண்டாகிய ஈசாநாதி பஞ்சப்பிரமங்களையே திருமேனியாகவுடையவன். பாசகலைகளுடன் கூடி யிருத்தலாற் சகளனும், சத்திகலைகளுடன் கூடி

யிருத்தலால் நிட்களனு மாதலாற் சகளநிட்களனும். இவற்குச் சதாசிவனென்றும் போகனென்றும் பெயர்.

இனிப் பிரவிருத்தனுவான் காரியங்களைப் பண்ணத் தொடங்கிய சத்தியை யுடையவன்; காரியம் பண்ணுகிற வேளையிற் கிரியை அதிகமாக வேண்டுமாதலால் ஞானசத்தி குறைவும், கிரியாசத்தி அதிகமுமாக வுடையவன். இவன் பாசகலைகளுடனே கூடியிருக்கையாற் சகளனும். இவற்கு மகேசுரனென்றும் அதிகாரனென்றும் பெயர்.

இந்தப் பதி - நிட்களமாகிய சிவம், சத்தி, நாதம், விந்து ; சகளநிட்களமாகிய சதாசிவன் ; சகளமாகிய மகேசுரன், உருத்திரன், விட்டுணு, பிரமா என்னு மொன்பது பேதப்படும். இவைகளிற் சிவத்திற்குச் சத்தியும், நாதத்திற்கு விந்துவும், இவ் விரண்டு மொழிந்த மூர்த்திகளைவர்க்கும் முறையே மனோன்மனியும், மகேசையும், உமையும், இலக்குமியும், சரசுவதியும் சத்திகளாம். காரியபேதத்தினாலே சத்தி சிவங்களும் பேதமாயின வென்க. பதிக்கு இந்தச் சிற்சத்தியே தேகங் கரண மிடமெல்லாமென வறிக.

இப்படிக் கர்த்தா வுண்டென் பதற்குப் பிரமாணமாவது :— அவன், அவள், அது எனச் சுட்டப்படும் பிரபஞ்சங் காரிய மாதலாற் கடாதிகளைப்போலக் கர்த்தாவை யுடையது. மாயை சடமாயிருத்தலாலும், ஆன்மாக்கள் தடைப்பட்ட ஞானக் கிரியையுடைமையாற் சுதந்தரமில்லாதனவா யிருத்தலானும், இவ் விரண்டையுந் தொழிற்படுத்துங் கர்த்தா வுண்டென்பது புலப்படும்.

ஆன்மாக்கள் மலமுடையனவாதலாலுங் கர்த்தா நிர்மலனாதலாலும், அவன் ஆன்மாக்களுக்கு வேறாகியும், எள்ளுக்கு நெண்ணெய்போலப் பிரிவற் றிரண்டற நின்றும், கன்மத்துக் கீடாகத் தனது சமவாய சத்தியினாலே சுத்தாசுத்த மாயைகளைச் சேர்த்துத் தனுகரணாதிகளை யுண்டாக்குவன்.

இவ்வாறாதலாற் கர்த்தா குலாலனைப்போலச் சரீரமுதலானவைகளை யுடையவனாக வேண்டுமெனின், அற்றன்று; காலம்போல அரூபியாயிருந்து சிருட்டியாதிகளைப் பண்ணுதல் கூடும்; அவன் தேகத்தையுடையவனாகில், அவனுடைய தேகத்தை யுண்டுபண்ண வேறே யொரு கர்த்தா வேண்டுமென்ற அநவத்தை வருமாதலால் தேகாதி சகல வுபாதியுமற்றவனே கர்த்தாவாம்; தேகாதிகளையுடைய அனந்தேசுரர் முதலானவர்கள் அவாந்தரகர்த்தாக்களாம்.

அவ்வாறன்றிச் சூரியன் நிர்விகாரியாயிருந்து தன் சன்னிதானத்திற் றாமரைமொட்டலரவும், ஆம்பல் குவியவும், சேறிறுகவும், வெண்ணெயிளகவும் பண்ணுமாறுபோல, கர்த்தா காரியத்திலே யுன்முகமாயிருக்கிற சத்தியுடனே கூடியிருப்பவனாதலால் தன் சன்னிதி மாத்திரத்திலே சிருட்டியாதிகளைப் பண்ணுவனென்க.

இந்தக் கர்த்தா சத்தனாயிருந்து பண்ணுங் கிருத்தியமாவன:— தீவிரதர சத்திநிபாதத்தை யுடையவர்களை யனுக்கிரகித்துப் பரமுத்தியில் விடுவதும், தீவிரசத்திநிபாதத்தை யுடையவர்களை அபரமுத்தி ஸ்தானத்தில்

வைப்பதுமாம். இவன் சுத்தமாயையைத் தனது சத்தியாற் கலக்கிச் சத்தரூபமாகிய நாதவிந்துக்களையும், அர்த்தரூபமாகிய நாதவிந்துவென்னும் பெயரையுடைய சிவதத்துவஞ் சத்திதத்துவங்களையும், இந்தத் தத்துவங்களிலே புவனங்களையும், இந்தப் புவனங்களிலே யிருக்கிறவர்களுக்குத் தனுகரணாதிகளையும், விந்து தத்துவத்திலே நின்றுஞ் சதாசிவ தத்துவத்தையுமுண்டாக்கி, அந்தச் சதாசிவ தத்துவத்துக்குச் சதாசிவனை நாயகனாகப் பண்ணி, அவனை வேறறக் கூடிநின்று சிருட்டியாதிகளைப் பண்ணுவனென்க.

இனி உத்யுக்தனாகிய சதாசிவனாயிருந்து பண்ணும் கிருத்தியமாவன:—சதாகாலமு மனுக்கிரகித்துமிருந்திருக்கிற விஞ்ஞானகலரிலே தீவிரதர சத்திநிபாதமுடையவர்களை யனுக்கிரகித்துப் பரமுத்தியில் விடுவதும், தீவிர சத்திநிபாதமுடையவர்களை யனுக்கிரகித்து மலபரிபாகத்துக் கீடாகச் சிவதத்துவ முதலான பஞ்ச தத்துவங்களிலும் ஞானக்கிரியைகளை விளக்கிய பரமுத்தராகவும், சிவசமராகவும், அணுசதாசிவராகவும், வித்தியேசுரராகவும், உருத்திரராகவும் வைப்பதும், நாதரூபமாகிய அந்தப் பரஞானத்தை ஈசானாதி யைந்து முகங்களால் வேதங்களாகவும் பிரணவர் முதலியோர்க்குக் காமிகாதி யாகமங்களாகவும் பிரித்து அனுக்கிரகிப்பதும், சாதாக்கிய தத்துவத்திலே நின்று ஈசுவரதத்துவத்தையும் அதிலே புவனங்களையும் அந்தப் புவன நாயகரான அனந்தர் முதலான அட்டவித்தியேசுரர்களுக்குத் தனுகரணாதிகளை யுண்டாக்குவதும், இந்த ஈசுவரதத்துவத்துக்கு

நாயகராக மகேசுரரைப்பண்ணுவதும், இந்தத் தத்துவத்திலே நின்றுஞ் சுத்தவித்தியாதத்துவத்தை யுண்டாக்குவதும், சுத்தவித்தையிலே யிருக்குஞ் சத்தகோடி மகாமந்திரர்களுக்குத் தனுகரணாதிகளை யுண்டாக்குவதுமாம்.

இனிப்பிரவிருத்தனாக இருந்து பண்ணுங் கிருத்தியமாவன :—பிரளயாகலரிலே தீவிரதரசத்திநிபாதமுடையவர்களை அனுக்கிரகித்துப் பரமுத்தியடையப் பண்ணுவதும், தீவிர சத்திநிபாதமுடையவர்களைச் சகல கன்மங்களையும் போக்கி யதிகாரமல மாத்திரமாக நிறுத்தி உருத்திரராகவும் புவனேசுரராகவும் பண்ணுவதும், அசுத்தமாயையைக்கலக்கி மாயை காலம் நியதி கலை யென்னுந் தத்துவங்களை யுண்டாக்குவதும், இவைகளிலே புவனங்களை யுண்டாக்குவதும், இந்த நான்கு தத்துவங்களிலே யிருக்கிறவர்களுக்குத் தனுகரணாதிகளை யுண்டாக்குவதும், ஸ்ரீ கண்டபரமேசுரனை யதிட்டித்து நின்று கலையிலே பிரகிருதியையும் வித்தையையும் இராகத்தையு முண்டாக்குவதும், கலாதிகளின் கூட்டத்திலே புருட தத்துவத்தை யுண்டாக்குவதும், பிரகிருதியைக் கலக்கிக் குணங்களைப் பிரிப்பதும், தம்முடைய வலப்பாகம் இடப்பாகம் மார்பென்கிற அங்கங்களிலே யுண்டான பிரம விட்டுணு நீலருத்திரனென்னு மும்மூர்த்திகளையும் ஸ்ரீகண்ட பரமேசுரனால் நாளடைவிலே முறையே இராசத சாத்துவிக தாமதங்களாற் சிருட்டிப்பித்துக் குணமுதலாகப் பிருதிவியீறான இருபத்து நான்கு தத்துவங்களிற் சிருட்டி திதி சங்காரம் பண்ணுவதுமாம்.

இனிக் கர்த்தா சுத்தாத்துவாவுக்குச் சத்தனும் உத்யுக்தனும், அசுத்தாத்துவாவுக்கு அனந்தேசுரனாகிய பிரவிருத்தனுமாக வருவானென வறிக.

பசுவிலக்கணம்

ஆன்மாவில்லை யென்று சிலர் சொல்லுகின்றமை யால் அஃதுண்டென்று நிருபிக்கப் படுகின்றது.

அஃதாவது சூனியமென்பதின்றி, என்னுடைய தேகமென்று சொல்லுவது மின்றி, இந்திரியங்கள் ஒழிந்திருக்கிற சொப்பனவத்தையிலு மறிகையால் இந்திரியங்களு மல்லனாய், சுழுத்தி துரியந் துரியா தீதங்களிலே அந்தக்கரணங்களும் பிராணவாயுவும் அற்றிருக்கையால் அந்தக்கரணங்களுக்கும் பிராணவாயுவுக்கு மந்நியனாய், விழித்தபோது முன் பண்ணின காரியக் குறைகளைப் பண்ணலும் அறிதலுஞ் செய்கையாற் கணிகனுமல்லாமல், தேகத்திற் கப்புறத்திலே யிருக்கின்ற பதார்த்தத்தைக் கிரகிக்கையால் அணுபரிமாண னும் மத்திய பரிமாணனுமல்லாமல், தானே யொன்றையு மறியமாட்டாம லிருக்கையாற் சுதந்தரனுமல்லாமல், சுக துக்கங்களாற் பலவகைப்பட் டிருக்கையால் ஒருவனு மல்லாமல், சுகதுக்க பலத்தைப் புசிக்கையாற் கர்த்தாவு மல்லாமல், நித்தியனாய் வியாபகனாய் அசுதந்தரனாய் அநேகனாய் அகர்த்தாவாய் மலத்தினாலே தடை பட்ட ஞானசொரூபியா யிருக்கிறவனென வறிக.

இந்த ஆன்மா அந்தக்கரணங்களுக்கு அந்நியனு யிருந்தாலும் இராசாவும் மந்திரியுங் கூடியிருக்குமாறு போல அந்தக்கரணங்களுடன் விடயபோக நிமித்தங் கூடிக்கொண்டிருப்பன் ; மலத்தாற் றடைபட்ட ஞான சொரூபியாகையால் ஐந்தவத்தையைப் பொருந்தி யிருப்பன்.

இவ்வாறு ஓர் ஆன்மா வுண்டென்பதற்குப் பிர மாணம் : தொழிலைப் பொருந்தியிருக்குந் தேகாதிகள் சடமாகையாற் கடாதிகளைப்போலத் தாமே சேட்டிக்க மாட்டா ; இவற்றைச் சேட்டிக்கிறவ னெவனே அவனே ஆன்மா வென்பதாம்.

இனி ஆன்மாவிற்குக் கேவலம், சகலம், சுத்தமென ஆணவ மாயை சிவசத்திகளான் மூன்றவத்தை வரும்.

இவற்றுள், **கேவலாவத்தை**யாவது:— தேகாதிக ளொன்றுமற்று, குணமற்று, தொழிலற்று, போக மற்று, கர்த்தாவாகையற்று, மைக்குண் மணிபோல ஆணவமலத்தினுலே மூடப்பட்டு ஓரறிவுமற்று, வியாபி யாயிருக்கும் அவதரம்.

சகலாவத்தையாவது:—பஞ்சகோச பெத்தனுய், அதனுலே பரிச்சின்னனுகிக் கிஞ்சிஞ்ஞனுய், அநாதி கன்மத்துக்கீடாய் அனேக யோனிகளிலுஞ் சஞ்சரித்து விடயங்களைப் புசிக்கும் அவதரம்.

சுத்தாவத்தையாவது:— இருவினையொப்பும் மல பரிபாகமுஞ் சத்திநிபாதமும் வந்த காலத்துச் சரியை கிரியை யோக ஞான பாதங்களை யுணர்ந்த குருகடா

க்ஷத்திஞலே மும்மலங்களையும் நீங்கிச் சச்சிதானந்த சிவமாக விளங்கும் அவதரம்.

இனி,இந்த ஆன்மாக்கள் அதமமான சகலர்,மத்திமமான பிரளயாகலர், உத்தமமான விஞ்ஞானகலரென மூவகைப் படுவர்.

இவருட் **சகல**ராவார்:— ஞானக்கிரியையைத் தடுக்கும் ஆணவ மலத்தையும், அது சிறிது நீங்குத னிமித்தமாக மாயாகாரியமாகிய கலாதிகளையும்,போகத்தின் பொருட்டுக் கன்மமலத்தையு முடையவராக விருப்பர்.

பிரளயாகலராவார்:—ஞானக்கிரியைகளைத் தடுக்கும் ஆணவ மலத்தை யுடையவர்களாய்,கன்மபரிபாகத்திஞலே காலாதிகளைத் தங்கள் வசம்பண்ணிக்கொண்டு ஈசுராத்துவாவிற் போகத்திற்கேதுவான கன்மத்தையு முடையவர்களாய், இவ்வாறு ஆணவங் கன்ம மென்னு மிருமலபந்தரா யிருப்பர்.

விஞ்ஞானகலராவார்:—ஆணவமலத்திலே தடைபட்ட ஞானக்கிரியையுடையவர்க ளாதலால் இல்லையென்பதற்கொத்த ஞானக்கிரியை யுடையவர்களாய் ஒருமலத்தரா யிருப்பர்.

இந்த மூவகை ஆன்மாக்களும் மாயையினுடைய அடியென்னு மான்மதத்துவ மிருபத்து நான்கிலும்,நடுவென்னும் வித்தியாதத்துவம் ஏழிலும்,முடிவிலு மிருப்பர். விஞ்ஞானகேவலர் அனுக்கிரகம் பெற்றதற்குப் பின் சிவதத்துவங்களிலே யிருப்பரென வறிக.

பாசவிலக்கணம்

பாசம் ஆணவம், திரோதாயி, சுத்தமாயை, அசுத்த மாயை, கன்மமெனை வைந்தாம்.

இவற்றுள், **ஆணவமல**மாவது:— நித்தியமாய் ஒன்றாய், விபுவாய், அநாதியாய், ஆன்மாக்கடோறும் ஞானத்தைத் தடுக்கும் எண்ணிறந்த சத்திகளையுடையதாய், செம்புக்குக் களிம்புபோலச் சகசமா யிருக்கும். இதற்குப் பரியாய நாமமாவன:— பசுநீகாரம்,[1] பசுத்துவம்,[2] மலம்,[3] அஞ்சனம்,[4] அவித்தை,[5] ஆவிருதம்,[6] மூலமலம்,[7] மிருத்தியு,[8] தமசு,[9] சென்மபீசம்,[10] ஆவரணம்,[11] அசுத்தி,[12] மோகம்,[13] சகசமலம்,[14] மூர்ச்சை,[15] பாசம்,[16] பந்தம்,[17] அஞ்ஞானம்,[18] திமிரம்,[19] கயம்,[20] வியாகதம்,[21] சடம்,[22] நிரோதம்,[23] கிலாபகம்,[24] ஆணவம்[25] எனப் பலவாம்.

---

[1]ஆன்மாவிற்கு மூடுபனி. [2]ஆன்மாவின் றன்மையா யிருப்பது. [3]அழுக்கு. [4]களங்கம். [5]அறிவின்மை. [6]பிரச்சன்ன படம்போல மறைப்பது. [7]அடிவேராகிய அழுக்கு. [8]மரணக்குறி. [9]தன்னையுஞ் சிவத்தையு மறியவொட்டாத அந்தகாரம். [10]சனிப்பதற்கு மூலமாயிருப்பது. [11]பித்திகைபோல மறைப்பது. [12]சுத்தமில்லாதது. [13]மயக்கத்தைப் பண்ணுவது. [14]இயற்கையாயுள்ளது. [15]செயலற்றுக் கிடத்தலைச் செய்வது. [16]கயிற்றை யொத்திருப்பது. [17]கட்டுவது. [18]அவித்தை. [19]தமசு. [20]குறைவு செய்வது. [21]கேடு செய்வது. [22]அறிவில்லாதது. [23]தடையாயுள்ளது. [24]வாடுந் தன்மையைச் செய்வது. [25]வியாபகமாகிய வுயிரை யணுத்தன்மைப் படுத்துவது.

இவ்வாறாகிய ஆணவமலம் உண்டென்பதற்குப் பிரமாணம் : ஆன்மா ஒன்றினாலே யாவரிக்கப் பட்ட சர்வஞ்ஞனாக வேண்டும் ; அங்ஙன மன்றி, அற்பவறிவனாகக் காண்கையாற் சிவனைப்போல மல ரகிதனுமல்லன். ஆன்மாவுக்கு அற்பவறிவியல்பன்று, எல்லாருக்கும் ஒருபடித்தன்றாய் ஞானமிருக்கை யாலும் மோக்ஷத்திலே சர்வஞ்ஞனாகக் கேட்கப்படு கையாலும். இவை யன்றியும், அசுசியாய்த் துக்க மயமா யிருக்கிற விடய போகங்களிலே யாசை வரு வதும் ஆணவமலத்தினாலே யென்பது.

இனித் திரோதாயியாவது:—ஆணவஞ் சட மாகை யால் இந்த ஆணவசத்திகளைச் சேட்டிப்பது, ஞான மயமாகிய ஆதிசத்தியேயாம் ; இந்த ஆதிசத்தியானது பாசகன்மத்துக்குப்பின் செல்லுகையா லிதையும் பாச மென் றுபசாரமாகச் சொல்லப்படும்.

இனிச் சுத்தமாயையாவது:—நித்தியமாய், ஒன் ருய், சடத்துவாவையும் வியாபித்திருப்பதாய், சட மாய், சுத்தமாய், சூக்குமை முதலிய வாக்கு நான்குக் கும், சடத்துவாக்களுள்ளே மந்திரம் பதம் வன்னங் களை யென்னும் நான்குக்கும், சிவதத்துவ முதலிய சுத்த தத்துவங்கள் ஐந்துக்கும், அவைகளிலுள்ள புவனங்களுக்கும், அந்தப் புவனங்களிலுள்ள விஞ்ஞா னகலருக்கும், அந்தப் புவனநாயகராகிய மந்திரமகேசு ரர் மந்திரங்களென்னும் அணுசதாசிவாதியோர் தனு வாதிகட்கும் முதற்காரணமாய், சிவனுக்கு வைப்புச் சத்தியென்று சொல்லப்படும் பரிக்கிரக சத்தியாயிருப்

பது. இதற்குக் குண்டலி, குடிலை, மகாமாயை, ஊர்த்துவமாயை, விந்துவென இவைபோலப் பரியாயநாமங்களு முண்டு. இஃதுண்டென்பதற்குப் பிரமாணம் இங்ஙனங் கூறிய காரியங்கள் காரணமின்றி யுண்டாகாமையாம்.

இனி ஊர்த்துவபாகமாகிய சுத்த மாயையினுடைய அதோ பாகமாகிய **அசுத்தமாயை**யாவது:—நித்தமாய்,ஒன்றாய், தன்னுடைய காரியங்களைக் காரணமின்றி வியாபித்திருப்பதாய், வஸ்துரூபமாய், கன்மத்துக் கிருப்பிடமாய்,அசுத்தமாய், சகலர் பிரளயாகலர் என்னும் ஆன்மாக்களுக்குப் பொதுவாய், பிரளய காலத்திலே தேகாதிக ளற்றிருக்கிற ஆன்மாக்களுக்குச் சிருட்டி காலத்திலே காலாதி தத்துவங்கள் தூல சூக்கும முதலானவைக ளுண்டாவதற்குப் பிறப்பிடமாய், சிவனுக்குப் போகசத்தியாகிய பரிக்கிரக சத்தியாயிருப்பது. இதற்கு அதோமாயை, மோகினி முதலான அனேக பரியாய நாமங்க ளுண்டு. இவ்வாறு ஓர் அசுத்தமாயை யுண்டென்பதற்குப் பிரமாணம் இந்தக் காலாதிகாரியங்கள் மாயையாகிய வுபாதானமின்றி யுண்டாகாமை; மண் ணுண்டை யின்றிக் கடமுண்டாகாததுபோல வென்க. கன்மஞ் சடமாகையா லான்மாவினிடத்தி லிராது ; இருக்கில், ஆன்மா சடமாகத்திரியும் ; சுத்தமாயை கன்மத்துக்கு மேற்பட்டிருப்பதாற் சுத்தமாயையிலு மிராது; ஆகவே சங்காரகாலத்திலே இதிலிருக்க வேண்டுமென்ப தறிக.

இனிக் **கன்மமல**மாவது:—மனோவாக்குக் காயங்களாற் பண்ணப்படுகையாற் கன்மமென்றும்,பண்ணின

கன்மம் நசித்துப் பல முண்டாகுமட்டும் புவனத்திலும் மருத்தெண்ணெய் வாசனைபோலப் புத்தியிலுந் தங்கிக் கண்ணுக்குக் காணப்படாதிருக்கையால் அதிட்டமென்றும், தேகாதிகளைப் பலவகையா யுண்டாக்குகையாற் சனகமென்றும், எல்லாவற்றையுந் தரிக்கையாற் றாரகமென்றும், புசிக்கப்படுகையாற் போக்கிய மென்றுஞ் சொல்லப்படுவதாய், அத்தியான்மிக முதலிய துக்கத்திரயத்திற்குக் காரணமாய், ஆன்மஞானமு மாயாகாரியங்களுங் கூடின விடத்திலே யுண்டாகுகையாற் றன்மாதன்ம சொரூபமாய், பிரளயகாலத்திலே பக்குவப்படுவதாய், சிருட்டி காலத்திலே தேகாதிகளுக் கேதுவாவதாய், சங்காரகாலத்திலே மாயையிலே யிருப்பதாய்ப் புசித்தா லொழியத் தொலையாமலிருப்பது. இது காயிகம், வாசிகம், மானசமென மூவகைப்படும்.

இவற்றுட் **காயிக**மாவது:—தெய்வங்களைப் பூசித்தல் முதலிய புண்ணியங்களும், ஒருவனை யடித்தல் முதலிய பாவங்களுமாம்.

வாசிகமாவது:—வேதாகம ஞானசாத்திர புராண அடங்கன்முறை முதலிய திருமுறைகளை யோதுதல், ஓதுவித்தல், பொருளைக் கேட்பித்தல், வேதாகம மந்திரங்களை வாக்கு, மந்தம், மானதமாகச் செபித்தல் முதலிய புண்ணியங்களும், ஒருவனை வைதல் முதலிய பாவங்களுமாம்.

மானசமாவது:— முக்கூற் றறுவகைச் சமயத்திற் கதிதப்பட்ட அகச்சமயமாறினுட் சைவர்கள் பண்ணும் அதோபாகமாகிய தியான ¦நீக்கிச் சைவசித்தாந்திகள்

ஐந்தெழுத்தும், திருநீறும், கண்டிகையும் பொருளாகக் கொண்டு, பரசிவத்தின் தடத்தலக்கண சொரூப லக்கணங்களை யறிந்து தியானித்தல் முதலிய புண்ணியங்களும், பிறருடைமையை யபகரிக்கச் சிந்தித்தல் முதலிய பாவங்களுமாம்.

இந்தக் கன்மஞ் சாதி யாயுப் போகங்களைக் கலந்து அகந்தை பண்ணி நிற்கும் ; அஃதின்றி ஒருவர்க்காயினுந் தீர்க்காயுவும் நல்லசாதியும் நல்லபோகமும் இல்லை ; புண்ணியத்தினாலே பாவமும் பாவத்தினாலே புண்ணியமு மழியா. ஆகம புராணவிதிப்படி பிராயச்சித்தம் பண்ணினாற் புசிப்பியாமற் போகும் ; அவ்வண்ணம் பரிகாரஞ்செய்யாவிடில்ஆன்மா பாவ கன்மங்களுக்கு ரௌரவங் கும்பிபாக முதலிய துக்கக் கிலேசங்களை யனுபவித்துப் பாடாணம்போற் கிடக்கும். கன்மம் புசித்தாலொழியத் தொலையாது; புசிக்குமிடத்து இதாகிதங்களான் மேலைக்குக் கட்டுப்பட் டிருப்பதும் மனோவாக்குக் காயங்களா லுண்டாகையா லுற்பத்தியையும், புசித்துத் தொலைதலால் நாசத்தையு முடையதாம். இது தொன்று தொட்டு வருகையால் ஆற்றொழுக்குப் போலப் பிரவாகாநாதியாம். இந்தத் தன்மாதன்ம சொரூபமான கன்மத்துக்கு மூலகாரண கன்மம் ஆணவமாயைகளைப்போல நித்தியமாய்ச் சகசமாயிருக்கும்.

இப்படி யொருகன்மம் உண்டென்பதற்குப் பிரமாணமாவது:—இருவர் ஒத்த நிலத்திலே **திருவள்ளுவர் குறளின்**படி உழவு முதலியன சரியாகச்செய்து பயிரிட்டிருக்க, ஒருவனுக்கு விளைகின்றது மற்றொரு

வனுக்கு விளையாமற் போகின்றது. இதற்குக் காரணம் யாது? 'பண்ணிய பயிரிற் புண்ணியந் தெரியும்' என்றபடி புண்ணிய பாவ வன்மை மென்மையெனக் கூற நிற்கும் கன்மமாம். அன்றியும், ஒருவன் சுவர்க்கத்திலே சுகமனுபவிக்கின்றான், மற்றொருவன் நரகத்திலே துக்கமனுபவிக்கின்றான். இதற்குக் காரணம் யாது? அதுவே கன்மமாமென வறிக.

இனிச் சிருட்டி வரலாறுவது:— சுத்தமாயையினின்று சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரியென நான்கு வாக்குகளும்; சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை யென்னும் ஐந்து சுத்த தத்துவங்களு முண்டாம்.

அசுத்தமாயையினின்று மாயை, காலம், நியதி கலை, வித்தை, அராகம், புருடன் என ஏழு தத்துவங்களுண்டாம்.

பிரகிருதி மாயையிலே சித்தம், புத்தி, அகங்காரம், மனம், சோத்திரம், தொக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம், வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம், சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், ஆகாயம், வாயு, தேயு, அப்பு, பிருதிவியென்னுமிருபத்து நான்கு தத்துவங்களுண்டாம்.

இனிச் சுத்தமாயையிலே **வாக்குகள் தோன்றுமாறு**:—சத்தனுடைய சத்தி சுத்தமாயையைக் கலக்கிக் காரிய உன்முகமாய்க் கூடி நிற்கும்பொழுது சந்திரகிரணங் கூடும்போது சமுத்திரம் உப்பி ஒலியுண்டாவதுபோல ஒருநாதமுண்டாம். அந்தநாதம் பரசரீரத்தி

னுள்ளாக நாதமாத்திரையாய் விளங்குவதாய் எல்லா அர்த்தத்தையுஞ் சாமானியமாய் விளக்குவதாய், மூவகை யான்மாக்களுக்கும் ஞானப்பிரகாசத்திற் கேதுவாய், **சூக்குமை**யென்னும் பேர்பெற்றிருக்கும்.

அது தானே விருத்தியாய்ப் பஞ்சவன்னங்களையுஞ் சூக்கும ரூபமா யொடுக்கிநின்ற மயின்முட்டைக்கு ளிருக்கிற நீர்போலப் பிரிக்கப்படாத வன்னங்களை யுடைத்தா யுன்முகமா யர்த்தவிசேடம் விளங்காமற் சிந்தையிலிருக்கிற சத்தம் **பைசந்தி**யாம்.

அதன் விருத்தியாய், விந்துவின் அதோபாகத்தி லுண்டாகிய அம்பிகை, வாமை, சேட்டை, இரௌத்திரி யென்னும் நான்கு சத்திகளினாலும் ஜயை, விஜயை, அசிதை, பராசிதை, நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, இந்திகை, தீபிகை, ரோசிகை, மோசிகை, வியோமரூபை, அநந்தை, அநாதை, அனுசிரிதையென்னும் பதினறு சத்திகளினு முண்டாகிய புத்தியிலிருக்கும் அகாரமுதலிய ஐம்பத்தோரக்கரங்களையும் அவற்றினடைவையு முடைத்தாய், செவிக்குக்கேட்கப்படாததாய், உள்ளேயுணரப்படுவதாய், உதானவாயுவின் றொழிற்பாடுபற்றியிருப்பதாய்க் கண்டத்தி லடங்கியிருக்குஞ் சத்தம் **மத்திமை**யாம்.

பிராணவாயு வியாபாரமாய், மேலே யெழுந்து தன் செவிக்கும் பிறர் செவிக்குங் கேட்க யோக்கியமாய், அர்த்தத்தைச் சொல்லுவதாயிருக்கிற சத்தம் **வைகரி**யாம்.

இந்த நான்கு வாக்குகளும் நிவிர்த்தி முதலிய பஞ்சகலைகளைப் பற்றுக்கோடாகச் சார்ந்து ஐவகைப் பட்டுச் சிவதத்துவ முதலிய பஞ்ச தத்துவங்களிலு மிருக்கும்; மூவகை யான்மாக்களிடத்திலும் பந்தித் திருக்கும். இந்த வாக்குகளைத் தனக்கு அந்நியமாக ஒரு வன் சிவஞானத்தாற் கண்ட காலத்திலே அவை ஆண வமலத்துடனே நீங்குமல்லது முன்னர் நீங்கா. இந்த வாக்குகளை எவன் அந்நியமாகக் காண்கின்றான் அவன் நித்தியனாய் நினைப்பும் மறப்பு மற்றவனாய் விகார மில்லாதவனாய்ச் சுதந்தரனாய் ஞானானந்த சொரூபி யாவன். எவ்வாறென்னில், சூரியப்பிரகாசத்தால் அந்த காரமும் நட்சத்திரப் பிரகாசமும் போவது போலச் சிவ ஞானப்பிரகாசத்தால் அஞ்ஞானமாகிய ஆணவமலமும் இந்த வாக்கு ரூபமாகிய விஞ்ஞானமும் போம். இது சுத்தமாயையிற் சுத்தமுண்டாமாறு சொல்லப்பட்டது.

சுத்தமாயையில் தத்துவங்களாகிய அர்த்தவடி வென்றும், சப்தவடிவென்றும் இருவிதமாகிய அத்து வாக்களில், அர்த்தவடிவாகிய சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை யென்னும் ஐந்திற் சிவதத்துவ மாவது சுத்தமாயையினுடைய முந்தின விகாரமென வறிக. இதில் சூக்குமையென்னும் வாக்கு மிகுத்துக் காமிகாதி சொரூபமாயிருக்கிற சிவாகமவழி முத்தியை இச்சிக்கிறவரிடத்திற் சிவஞானவிளக்கம் அதிகம், அதி லுஞ் சிறிததிகம், மிகவுமதிகம் என்பதை விளக்கும். இன்னும் அவ் வாக்கு ஈசுரசக்திக்கு ஏவல் செய்து கொண்டிருக்கும். இன்னும் அச் சிவதத்துவம், மலத் தைப்போக்குஞ் சத்திக்குஞ் சிவபதத்தையடைவிக்குஞ்

சத்திக்கு முபாதியாயிருக்கிற இந்திகை, தீபிகை, ரோசிகை, மோசிகை, ஊர்த்துவகாமினியென்னுங் கலைகளுக்கு இருப்பிடமாய், நாதமென்று சொல்லப் படுவதாய், தன்மரூபமாயிருப்பதெனவறிக.

இனிச் **சத்திதத்துவ**மாவது காமிகாதி அபர ஞானத்தையுடைய பைசந்தியென்னும் வாக்கு விருத் திக்குக் காரணமாய், ஆன்மாவுக்குச் சமுசார நிவிர்த் திக்குப் பகையாயிருக்கிறதிற் பிரவிர்த்திக்கை, இதில் விஷயகோசரமாயிருக்கிற பசுஞானத்தை விடுத்துச் சிவஞானத்தைச் சாட்சாத்காரமாய்ப் பிரகாசிப்பிக்கிற தற்குத் தாபத்திரய முதலான சர்வதுக்கங்களையும் போக்குகை ஆகிய இவற்றைப் பண்ணுகையால் நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியாதீதை யென்னுஞ் சத்திகளுக் கிருப்பிடமாய், விந்துவென்று சொல்லப்படுவதாயிருக்கிற சிவதத்துவ காரியமாம்.

இனிச் **சாதாக்கியதத்துவ**மாவது காமிக முத லான அபரஞானத்தையுடைய மத்திமை யென்னும் வாக்கு விருத்திக் கிருப்பிடமாய், காமிகமுதலான தந்திரங்கள் வேறுகிறதற்குக் காரணங்களாயிருக்கிற பிரணவாதிகட்குஞ் சாமீப்பிய முதலானவற்றை யடைந்தோர்க்குந் தனுகரணாதிக்குக் காரணமாய், சத்திதத்துவ காரியமாம்.

இனி **ஈசுரதத்துவ**மாவது அநந்தேசுராதிகட்கும் அவர்களை யுபாசிக்கையால் அவர்களுடைய பதத்தை யடைந்திருக்கிறவர்கட்குந் தனு கரண புவனாதியை யுண்டாக்குவதாய், சதாசிவதத்துவ காரியமாம்.

இனிச் சுத்தவித்தியாதத்துவமாவது காமிக முதலான ஆகமங்களுடைய வைகரி யென்னும் வாக்கு விருத்திக் கிருப்பிடமாய், சத்த கோடி மகாமந்திரங்களுக்கும், கணேசுரர்களுக்கும், இந்திரன் முதலான திக்குப் பாலகர்களுக்குந் தனுகரணபுவன முதலானவற்றின் காரணமாய், ஈசுவரதத்துவ காரியமா யிருப்பதாம்.

பரமான்மா ஞானமாத்திரத்துடன் கூடியிருக்கிறபொழுது அவற்குச் சிவமென்று பெயர்; அவனிருக்குந் தத்துவத்திற்குஞ் சிவமென்று பெயர். தொழின்மாத்திரத்துடன் கூடியிருக்கிறபொழுது அவற்குச் சத்தியென்று பெயர்; அவனிருக்குந் தத்துவத்திற்குஞ் சத்தியென்று பெயர். ஞானக்கிரியைகள் சமமாயிருக்கக் கூடியிருக்கிறபொழுது அவற்குச் சதாசிவமென்று பெயர். அவனிருக்குந் தத்துவத்திற்குஞ் சதாசிவமென்று பெயர். கிரியையதிகமும் ஞானங் குறைவுமாயிருக்கக் கூடியிருக்கிற பொழுது அவற்கு ஈசுரமென்று பெயர்; அவனிருக்குந் தத்துவத்திற்கும் ஈசுரமென்று பெயர். ஈசுரமெனினும் மகேசுரமெனினு மொக்கும். ஞானம் அதிகமும் கிரியை குறைவுமாயிருக்கக் கூடியிருக்கின்ற அப்பொழுது அவற்குச் சுத்தவித்தையென்று பெயர்; அவனிருக்குந் தத்துவத்திற்குஞ் சுத்தவித்தையென்று பெயர். அப் பரமான்மாவுக்கு இவ் வைவகைத் தத்துவமுஞ் சுதந்தரவடிவமாம்.

மாயாதத்துவமாவது ஆன்மாவுக்கு மயக்க வறிவைப் பண்ணுவது.

காலமாவது மாயையினின்றுந் தோன்றி, இலவந் துடி முதலியவற்றிற்குக் காரணமாய்; இம்மட்டென்று போகத்தை யளவிடுவதாய்; எல்லை, பலம், புதுமைகளைப் பண்ணுவதாய்ச் செல்கால நிகழ்கால மெதிர்கால முதலாக அனேகபேதப்பட்டிருப்பது.

நியதியாவது காலத்தின்பின் மாயையினின்றுந் தோன்றி ஒருவன் செய்த கன்மபலத்தை விஷயம் நன்றாயிருக்கிறதென்று புசியாமலும், தான் செய்த கன்மபலத்தை விஷயம் நன்றாயிருக்கவில்லையென்று புசியாமலிராதபடியும், ஒருவன் தேகாதிகள் மற்றொருவனுக்குப் போக ஏதுவாகாதபடியும், அவனவன் செய்த கன்மம் அவனவனே நுகரும்படியும் இராசாக்கினை போல நிச்சயம் பண்ணி நிறுத்துவது.

கலையாவது நியதியின்பின் மாயையினின்றுந் தோன்றுவதாய், ஆணவத்தை ஏகதேசத்தின் நீக்கி ஆன்மாவின் கிரியாசத்தியை விளக்குவதாய், மாயாகாரியமாயிருப்பது. இஃதுண்டென்பதற்குப் பிரமாணம் இதுவே ஞானக்கிரியைகளை விளக்கும், மற்றையொன்றினாலும் அவ் விளக்கம் வாராதென்பது.

வித்தையாவது கலையிலுண்டாவதாய் ஆன்மாவுக்கு ஞானசத்தியை விளக்குவதாய்ப் போகத்தைக் கிரகிக்கிறதற்குக் காரணமாயிருப்பது.

இராகமாவது வித்தையிலே யுண்டாவதாய், ஆன்மாவின் இச்சா சத்தியை விளக்குவதாய், புத்தி தருமமான அவ்வவ் விஷயங்களி லாசையை யுண்டாக்குவது.

புருடதத்துவமாவது இங்ஙனங் கூறிய கலை முதலான பஞ்ச தத்துவங்களையும் பொருந்திப் பஞ்ச கஞ்சுகமுடைய உயிரே முற்கூறிய இச்சா ஞானக் கிரியைகளை மருவிப் போகத்து உன்முகமாய் நிற்பது.

இனிப் பிரகிருதியாவது கலையினின்றும் ஸ்ரீகண்ட பரமேசுரனு லுண்டாக்கப்பட்டதாய், குணமுதலான இருபத்துநான்கு தத்துவங்களுக்குக் காரணமாய் பிரிக்கப்படாமற் குணங்களைச் செவ்வையாகக் கூட்டி யிருப்பதாய், விபரீதவுணர்வை யுடையதாகிய அவிச் சையைத் தோற்றுவிப்பது. இதற்கு மூலப்பிரகிருதி யென்றும் பெயர்

இனிக் குணதத்துவமாவது பிரிக்கப்பட்ட குணங்கள் சரிவரக் கூடியிருக்கு மவதரம். ஆகையாற் பிரகிருதிக்குங் குணதத்துவத்திற்கும் பேதமில்லை ; இக் குணதத்துவஞ் சாத்துவிகம், ராசதம், தாமத மென மூன்றாய், ஒவ்வொன்றும் முத்திறப்பட்டு ஒன்பது வகையாயிருக்கும்.

சித்தமாவது பிரகிருதியி னதோபாகமே ; அது போகத்திற் சாமானியமாயிருக்குமாறு சிந்திக்கப் பண்ணும். குணம், சித்தம், பிரகிருதியென்ற மூன்றும் அவதர நாமங்களாம்.

புத்தியாவது குணதத்துவத்தினின்றும் உண் டானதாய், உயிர்கள் செய்த புண்ணியபாவங்கள் தன்பாற் சார இருவினைக்கீடாக வந்த விடயத்தை

அஃதின்னதென நிச்சயித்து நிற்பது. இது தன்மம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், அதன்மம், அஞ் ஞானம், அவைராக்கியம், அநைசுவரியம் என்னும் எட்டினுக்குங் காரணமாயிருப்பது.

அகங்காரமாவது என்னோடொப்பவர் ஒருவரு மில்லையென்னும் அகந்தைக்குக் காரணமாய், யான் எனதென்னும் அபிமானத்துக்குக் காரணமாய்,புத்தியி னின்றும் உண்டானதாயிருப்பது ; இது சாத்துவிக முதலிய குணங்களுடைய மிகுதியினால் தைசதம், வைகாரிகம், பூதாதிகமென மூன்று பேதப்படும். இவை மன முதலியவற்றிற்குக் காரணமாயிருக்கும்.

மனமாவது தைசதாகங்காரத்தி லுண்டானதாய், சங்கற்பமென்னும் நினைவும் விகற்பமென்னும் சந்தேக நினைவும் பிறத்தற்கிடமாய், இந்திரியங்கள் வழியாய் வரும்பொருள்களைப் பற்றி யறியு மறிவாம். இன்ன விசேடணத்துடனே கூடினது இன்ன விசேடிய மென விஷயீகரித்து வரும் நிச்சயத்தையும் பண்ணு வது; இதுதான் சுரோத்திராதி இந்திரியங்களிலே கூடினவளவிலே சத்தாதிஞானங்களை யுண்டாக்கும் ஆகையால் விபுவுமன்று ; பஞ்சாவதானி யிடத்தே யொருங்கே ஞானம் வருகையால் அணுவுமன்று; விரிதல் குவிதலையுடைய மகத்தாம்.

இனிச் சுரோத்திராதியாவன:-முற்கூறிய தைசதா கங்காரத்தினின்றுஞ் சுரோத்திராதி யிந்திரியங்க ளுண்டாம் ; தன்னை வந்தடைந்த சத்தத்தைக் காது

வெளியி லாகாசமாயிருந்து கிரகிக்குந் தத்துவஞ் **சுரோத்திரம்.**

தன்னை வந்தடைந்த பரிசத்தைத் துவக்கினிருந்து கிரகிக்குந் தத்துவம் **துவக்கு.**

நயன ஒளி வழியாகப் போய் ரூபத்தைக் கிரகிக்குந் தத்துவம் **சட்சு.**

நாக்கினிடமாக வந்தடைந்த ரசத்தைக் கிரகிக்குந் தத்துவம் **சிங்ஙுவை.**

மூக்கினிருந்து பிருதிவியின் கந்தத்தைக் கிரகிக்குந் தத்துவம் **ஆக்கிராணம்.**

காது முதலான தானங்களிருக்கவுஞ் செவிடர் முதலோர்களுக்குச் சத்தாதிகள் அறியப்படா திருக்கையால் அந்தத் தானங்களில் இந்திரியமில்லை யென்க.

இவற்றிற் கந்நியமாய், வைகாரிகாகங்காரத்தினின்றும் வாக்கு முதலான கன்மேந்திரியங்களுண்டாம்.

இவற்றில், நாக்கினிடமாக நின்று சொற்களை வசனிக்குந் தத்துவம் **வாக்கு**; கால்களிடமாக நின்று நடத்தல் ஓடல் முதலியவற்றைச் செய்விக்குந் தத்துவம் **பாதம்**; கைகளினிடமாக நின்று ஈதலேற்றல் முதலிய தொழில்களைச் செய்யுந் தத்துவம் **பாணி**; குதத்திலே நின்று மலவிசர்க்கங்களைப் பண்ணுந் தத்துவம் **பாயு**; குய்யத்திலே நின்று ஆனந்தத்தைப் பண்ணுந் தத்துவம் **உபஸ்தம்.**

இனிப் பூதாதிகாகங்காரத்தினின்று பஞ்சதன் மாத்திரையுண்டாம்; அர்த்தந் தரும் விசேடமின்றி யிருக்குஞ் சாமானிய சத்தம் சத்த தன்மாத்திரை; குளிர்ச்சி உஷ்ணமுதலான விசேடங்களற்றுச் சாமானிய சத்தமும் சாமானிய பரிசமுமாயிருப்பது பரிச தன்மாத்திரை; வெண்மை, கருமை, செம்மை முதலிய விசேடங்களற்று ரூபசாமானியமாய்ச் சத்தபரிசரூபமாயிருப்பது ரூப தன்மாத்திரை; மதுரமுதலான விசேடமற்று ரசசாமானியமாய்ச் சத்த பரிச ரூபரசமாயிருப்பது ரச தன்மாத்திரை; நற்கந்தந் துர்க்கந்தமாகிய விசேடமற்றுக் கந்தசாமானியமாய்ச் சத்த பரிச ரூப ரச கந்தமாயிருப்பது கந்த தன்மாத்திரை.

இவ்வாறாகிய பரிசமுதலான தன்மாத்திரைகளில் ஒவ்வொரு குணம் அதிகமதிகமாகக் கூடியிருக்கையால், வாயுவாதி பூதங்களிலும் ஒவ்வொரு குண மதிகமென வறிக.

ஆகாசாதிபூதங்களுடைய சூக்குமாவத்தைச் சத்தாதி தன்மாத்திரையினின்றும் ஆகாசாதி பூதங்களுண்டாம்.

ஆகாயம் சத்த தன்மாத்திரையி லுண்டானதாய், இடங்கொடுப்பதாய், தூலமாய், சுத்தமாய், வன்னரூபமாய், சத்தத்தைக் குணமாயுடையதாயிருக்கும்.

வாயு சத்தத்துக்குப் பேரி முதலான நிமித்த மொழித்துக் குணியல்லதாய், பரிசதன்மாத்திரையின் ஆரம்பிக்கப்பட்டதாய், உஷ்ணமும் அநுஷ்ணமு மல்

லாத பரிசத்தையுடையதாய், சத்தத்தையுடையது. இது பிராணன், அபானன் முதலாக அனேக பேத முடையதாய், அசைத்தலென்னுந் தொழிலைப் பண்ணும்.

அக்கினி ரூபதன்மாத்திரையி லுண்டானதாய், சிவந்தரூபத்தையுடையதாய், பிரகாசரூபமாய், உஷ்ணபரிசத்தையுடையதாய், சத்தத்தை யுடையதாய், பாகத்தைப் பண்ணுவதாயிருக்கும்.

அப்பு ரசதன்மாத்திரையி லுண்டானதாய், வெண்ணிறத்தையும் ரசத்தையுங் குளிர்ந்த பரிசத்தையுஞ் சலசல சத்தத்தையு முடையதாய், நெகிழ்ச்சியாய், தூள் முதலியவற்றை வலிய வுண்டையாகப் பண்ணுவதாயிருக்கும்.

பிருதிவி கந்ததன்மாத்திரையி லுண்டானதாய், சுகந்த துர்க்கந்தங்களையும் மதுரமுதலான ஆறு ரசங்களையும் வெண்ணிறமுதலிய நானாவித வன்னங்களையுஞ் சூரியன் அக்கினி முதலியவைகளின் கூட்டரவின் பாகத்திலுண்டாகிற உஷ்ணமும் அநுஷ்ணமும் மல்லாத பரிசத்தையுங் கடகட சத்தத்தையு முடையதாய், கடினதாரக ரூபமாயிருக்கும்.

இந்தப் பஞ்சபூதங்கள் ஒன்றில் ஒன்றுண்டாகாது; காரணகுணங் காரியத்தில் வரவேண்டுமென்னும் முறையா லென்க.

தத்துவமாவது பிரளயமட்டாக விருக்கிற தாகையாற் சரீராதிகள் தத்துவமல்ல பூதவிகாரமாம்.

இச் சிவதத்துவ முதற் பிருதிவிதத்துவ மீறான முப்பத்தாறுஞ் சாதாரணம் அசாதாரணமென் றிரு வகைப்படும். சாதாரணமாவது புவனத்திற் காதார மாய்த் தூலமாயிருக்கும்; அசாதாரணமாவது சூக்கும ரூபமாய் ஞானக்கிரியையை விளக்குவதாக ஆன்மாக்க டோறும் வெவ்வேறாயிருக்கும்.

இனிச் சுத்தமாயாகாரியம் ஐந்திற்குஞ் சிவதத் துவமென்றும், சுத்ததத்துவமென்றும், சுத்தாத்துவா வென்றும், பிரேரககாண்டமென்றும் பெயர்.

மாயாதிக ளேழுக்கும் வித்தியாதத்துவ மென் றும், ஈசுரதத்துவ மென்றும், சுத்தாசுத்ததத்துவ மென்றும், மிச்சிராத்துவா வென்றும், போககாண்ட மென்றும் பெயர்.

சித்தமுதலான விருபத்துநான்கு தத்துவங்க ளுக்கும் ஆன்மதத்துவமென்றும், அசுத்ததத்துவ மென்றும், அசுத்தாத்துவா வென்றும் போக்கியகாண்ட மென்றும் பெயர்.

இந்தத் தத்துவங்களால் வருங் காரியங்கள் சாதா ரணமென்றும், அசாதாரணமென்றும், பொதுச்சிறப் பாகிய உபயரூபமென்றும் மூவகைப்படும். இவற்றிற் புவனங்க ளெல்லார்க்கும் போக வேதுவாகையாற் சாதாரணமாம். பஞ்சதன்மாத்திரைகள், மன அகங் கார புத்திகள் இந்த எட்டுத்தத்துவங்களின் கூட்டர வினா லுண்டான புரியட்ட தேகம் அவரவர்களுக்குப் போக வேது வாகையால் அசாதாரணமாம். இந்தப்

புரியட்ட தேகத்தினின்றும் ஆன்மா ஓருலகத்திற் போக்குவரவுடையவ னவன். ஸ்திரீகள் முதலியவருடைய தூல தேகம் அவர்களுக்குப் போகத்துக்கு ஏதுவுமாய்க் கணவனுக்குப் போக்கியமுமா யிருக்கையால் உபயரூபமாம். இவ்வாறு மற்றைத்தேகங்களும் உபயரூபமென வறிக.

இனித் தூலதேகமானது சூக்குமபூதங்களை விட்டு நீங்காமல் மாதாபிதாக்களுடைய சுரோணித சுக்கிலங்களுடனேயுண்டாம்.

அவ்வாறுண்டாகுமாறு: எலும்பு, மாமிசம், மயிர், துவக்கு, நகம், தந்தம், நரம்பு இவை முதலியன சூக்கும பிருதிவியிலும்; மூத்திரம், ரத்தம், கபம், வேர்வை, சுக்கில மிவை முதலியன சூக்குமமான அப்புவிலும்; இருதயபாகங் கண்களிற் பித்தபாக முதலானவை சூக்குமமான அக்கினியிலும்; பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் இவை பத்துஞ் சூக்கும வாயுவிலும்; ஆகாசமாவது சூக்குமாகாசத்திலு முண்டாம். இவ்வாறு சூக்கும பூதத்தினின்றும் தூல தேக முண்டாமென வறிக.

இவ்வாறு ஆணவமாயை கன்மங்களாலே தத்துவ தாத்துவிகமான சகலபந்தங்களுடனுங் கூடின சகலருக்கு முன்சொன்ன கேவலாதியவத்தைகள் சாக்கிராதிகளோடுகூடிப் பதினைந்து பேதப்படும்.

கேவலாவத்தை யைந்திற்கும் சகலாவத்தை யைந்திற்கும் இலக்கணம் வருமாறு:—

கேவலம் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீத மென் றைந்து வகை யாகும்.

கேவல சாக்கிரமாவது ஆன்மா முப்பத்தாறு தத்துவங்களுடனுந் தாத்துவிகங்க ளறுபதுடனுங் கூடிச் சகல விடயபோகங்களையு மனுபவித்துக் கொண்டிருக்கும் வேளையில் போகவேதுவான கன்ம மில்லாதிருக்கையாற் பிரேரககாண்டமாகிய சுத்ததத்துவங்களைந்தும், போககாண்டமாகிய காலாதிகளேழும், பிருதிவிமுதலான பூதங்க ளைந்துமாகப் பதினேழும் நீங்கச் சுரோத்திர முதலாகிய ஞானேந்திரியங்கள் ஐந்தும், வாக்கு முதலாகிய கன்மேந்திரியங்கள் ஐந்தும், சத்தமுதலாகிய தன்மாத்திரைகள் ஐந்தும், தாத்துவிகமாகிய வசனாதிகள் ஐந்தும், பிராணன் முதலாகிய தாத்துவிகமாகிய வாயுக்கள் பத்தும், மன முதலாகிய அந்தக்கரணங்கள் நான்குமாகிய முப்பத்து நான்கு கருவிகளுடன் கேத்திரிகனாகிய ஆன்மாவுங் கூடி முப்பத்தைந்தாய்ச் சாக்கிரத்தானமாகிய லலாடத்திலே நின்று மேற்கூறிய பிரேரிக்கிற தத்துவமும் புசிக்கிற தத்துவமுந் தாரகமாகிய பூதங்களும் நீங்குகையால் ஆணவமல மேலிட்டுக் கண்டுங் காணமற் கேட்டுங் கேளாமல் மயங்கியிருக்கு மவதரமாம். இஃது அறிவில்லாச் சாக்கிரம்.

புறம்பே விடயங்களைக் கிரகிக்கும் ஞானேந்திரியம் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்து மாகிய இப் பத்து நீங்க நின்ற சத்தாதியைந்தும், வசனாதியைந்தும், பிராணாதிவாயு பத்தும், மனாதி அந்தக்கரண நான்கும்,

கேத்திரிகனுமாகிய விருபத்தைந்துங் கண்டத்தானத்திலேநின்று சாக்கிராவத்தையிலே நின்றனுபவித்த போகத்தை நினைக்கவும் அக்காலத்திலே வருஞ் சூக்கும தேகபோகமாகிய யானையேறி மாலைசூடுதல் முதலியவற்றை யனுபவிப்பது **கேவல சொப்பனம்.**

முற்கூறிய சொப்பனவத்தையிற் கூடியிருந்த விருபத்து நான்கு கருவியில் இருபத்திரண்டு நீங்க நின்ற சித்தமும் பிராணவாயுவுங் கேத்திரிகனுங் கூடி இருதயத்தானத்திலே நின்று சுகமாய்த் தூங்குவது **கேவல சுழுத்தி.**

சித்தமு நீங்க உச்சுவாசம் நிச்சுவாசம் பண்ணிக் கொண்டு தேகத்துக்குக் காவலாயிருக்கிற பிராணவாயுவுடன் கேத்திரிகனுங் கூடி நாபித்தானத்திலே நின்று ஒன்றுந் தெரியாமற் றூங்குவது **கேவல துரியம்.**

பிராணவாயுவை நீக்கிக் கேத்திரிகனுகிய ஆன்மா வொருவனே தனித்து மூலாதாரத்திலே யாணவமலத்துடனே கூடி ஓரறிவு மற்றிருப்பது **கேவல துரியாதீதம்.** இந்த அதீதாவத்தை தானே நித்திய கேவலாவத்தையாம். இவற்றிற்குக் கீழாலவத்தை யென்றும் பெயராம்.

சகலமும் கேவலம் போலவே ஐந்து வகையாகும்.

இலாடத்தானத்திலே நின்று ஆன்மா எல்லா விடயங்களையும் அனுபவிக்கிற வேளையில் கல்லெறி முதலியவைகளாலுஞ் சிசுமரணங் கேட்பது முதலியவைகளாலுந் திடுக்கிடப் பிராணவாயுவுஞ் சீவியாமல் ஒன்றையு மறியாமல் மூர்ச்சித்து மயங்கி நின்ற வவதாஞ் **சாக்கிராதீதம்.**

அற்பமாகப் பிராணவாயு சீவித்துப் பெருமூச் செறிவது **சாக்கிரத்திற் றுரியம்.**

சித்தத்துடனும் பிராணவாயுவுடனுங் கேத்திரி கன் கூடித் துக்கமாத்திரத்தை யறிவது **சாக்கிரத்திற் சுழுத்தி.**

ஞானேந்திரியங்கள் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்தும், பிராணாதி வாயுக்கள் பத்தும், அந்தக்கரண நான்குமாக விருபத்து நான்குடன் கேத்திரிகனுங் கூடி யிருபத்தைந்தாய்த் துக்கம் இதனால் வந்த தென்கிற துர்ச்சிந்தையுடனே துக்கத்தை யனுபவிப்பது **சாக்கிரத்திற் சொப்பனம்.**

தத்துவ தாத்துவிகங்களெல்லாவற்றினுங் கூடிச் சர்வ விடயங்களையும் அனுபவிப்பது **சாக்கிரத்திற் சாக்கிரம்.**

சகலாவத்தை யுடையவனாகிக் கலையினால் விளக்கப்பட்ட ஞானக்கிரியா சொரூபமான சைதன்னியத்தையும் வித்தையினால் விளக்கப்பட்ட விடய ஞானத்தையும் அறிபவனாய், இராகத்தினால் விடயத்தில் இச்சை கொள்பவனாய், குணரூபமான பிரதானத்தினாலும் புத்திமுதலான கரண சமூகத்தினாலும் அவற்றின் காரியங்களாலும் பேதிக்கப்படும் புருடனாய், நியதியுடன் கூடுகையாற் றான் புசிக்கும் போகங்களிலே நியமிக்கப் பட்ட காலத்திலே நியமிக்கப் பட்ட போகத்தில் மோகிதனாய், இவ்வாறு தத்துவகலா பந்தங்களுடையனாய், கிஞ்சிஞ்ஞத்துவமுள்ளவனாய்,

தூல சூக்குமதேகங்களுடன் கூடினவனுய், மாயா போகங்களிலே கூடித் தன்வயனுகித் தேகாதிகளே தானென்று விசாரித்து மூடனுகித் திரிகிற காலத்தில் வேதபாகியமான சமயங்களிலேயிருந்து பண்ணின புண்ணிய விசேடங்களினுல் வேதத்துக்குள்ளாயிருக் கிற சமயங்களையடைந்து, அவைகளிலிருந்து பண்ணின புண்ணிய விசேடங்களினுல் அவற்றின் விசிட்டமான வைதிக சைவசமயத்தை யடைந்து, சமயவிசேட தீக்கை பெற்றுச் சாலோகாதிகளை யடைந்து, அங்கே விரத்தி வந்து, புண்ணியபூமியிற் செனித்து, கிரியை முதலியவற்றை யனுஷ்டித்து அவைகளினுல் இருவினை யொப்பும் மலபரிபாகமும் வர, நிவிர்த்திமுதலிய மந்திர சத்தியும் பதிய, நல்லாசிரியனைத் தேடுங்கால் வாக்கு மனுதீதமாயிருக்கிற சிவமே கிருபையினுலே கிருத காடிந்நியம்போல ஆசாரியனுகக் காணப்பட்டுத் திருநோக்கம் முதலியவற்ருல் மந்திராதி பஞ்சாத்துவா கற்பித நிவிர்த்தியாதி கலைகளைச் சோதித்துப் பாச க்ஷயம் பண்ணிப் பரிபாகத்துக்கீடாகச் சுத்தாத்துவாவி லிருக்க யோக்கியனுகச்செய்து சச்சிதானந்த சிவமாகப் பண்ணும்.

உத்தம விலக்கணனுன ஆசாரியன் உத்தமவிலக் கணனுயிருக்கிற சீடனுக்குச் சாத்திரத்திலே சொன்ன படி சமய விசேட நிருவாண அபிடேகங்களைப் பண்ணு வன். எவன் ஆலோகனஞ் செய்த மாத்திரத்தில் பரமானந்த முண்டாகும் அவனே ஞானுசாரியனென வறிக.

அவ் வாசாரியன் சத்திநிபாதமுடைய தீவிரதர பக்குவனுக்குச் சாம்பவதீக்கை பண்ணுவன்.

சாம்பவதீக்கையாவது ஞானதீக்கை கிரியா தீக்கை யென அனேக பேதமாயிருக்கிற நிருவாண தீக்கையினும் வேருய்ச் சீவர்களுடைய தாதான்மியத்தை விளக்குவதென வறிக.

இவ்வாறு சாம்பவதீக்கை பெற்றுச் சிவ சொரூபமான ஆசாரியனுல் 'இந்திரிய வேடருடன் கூடி நம்மில் அநந்நியமான உனது சொரூபத்தை யறிந்தாயில்லை, நாமே நீயாவா' யென்று போதிக்கப்பட்டவன் தான் சிவனைக் காட்டினும் அநந்நிய னென்று சிந்தித்தல் தெளிதல் செய்து, ஆணவாதி பாசங்களை நீக்கி, சச்சிதானந்த சொரூபமான சிவத்தையே அநந்நியமாகச் சாட்சாத்கரித்து, அதிலே யழுந்தி யதுவேயாய்க் காசமற்ற கண் சூரியப்பிரகாசத்துடன் கலந்து பின்னென்றுங் காணுததுபோலப் பசுகரணஞ் சிவகரண மாகையாலே நின்மல சாக்கிராதியான சுத்தாவத்தைகளைந் தையும் பொருந்துவன். அவை வருமாறு:—

நின்மல **சாக்கிர**மாவது நின்மலசாக்கிராவத்தைக்குத் தானமாகிய இருதயத்திலே சிவசத்தியுடனே கூடுதலால், உப்பளத்திலே விழுந்தது உப்பாமாறுபோல ஜீவீபூதமாய், அகர வுகர மகார விந்து நாதங்களுடன் கூடிய மனம், அகங்காரம், புத்தி, சித்தம், உள்ளம் என்னும் அந்தக்கரண மைந்துடன் கூடினவாகிய இந்திரியங்களாற் காணப்பட்ட சத்தாதி விட

யங்களைச் சிவாகாரமாகவும் விடயசுகங்களைச் சிவானந்த மாகவு மனுபவிப்பது நின்மல சாக்கிரம்.

நின்மல சாக்கிராவத்தைக்குக் காரணமான அகாரம் உகாரத்திலும், புறம்பே விடயங்களைப் பற்று மனம் அகங்காரத்திலும், கிரியாசத்தி ஞானசத்தியிலு மொடுங்க, அகங்காராதி நான்குடனும் அவற்றிற்குப் பிராணனாகிய ஞானசத்தி முதல் நான்குடனுஞ் சொப் பனவத்தைக்குத் தானமாகிய கண்டத்தானத்திலே அந்தக்கரண விருத்தியுடன் சிவோகம்பாவனை பண்ணி நிற்பது நின்மல சொப்பனம்.

நின்மல சொப்பனவத்தைக்குக் காரணமாகிய உகாரம் மகாரத்திலும், நானென்று கிரகிக்கிற அகங் காரம் புத்தியிலும், ஞானசத்தி இச்சாசத்தியிலு மொடுங்க,புத்திமுதன் மூன்றும் அவற்றைப் பிரேரிக்கு மகாராதி மூன்றும் அவற்றிற்குப் பிராணனாகிய இச்சாசத்தி முதன் மூன்றுடனுஞ் சுழுத்தித்தான மாகிய மூலத்திலே தேகேந்திரிய வியாபாரமற்று வாசாமகோசரமாய் ஞாதிரு ஞான ஞேய மூன்றும் மூன்றாகச் சுகத்தை யனுபவித்து நிற்பது நின்மல சுழுத்தி.

நின்மல சுழுத்தியவத்தைக்குக் காரணமான மகாரம் விந்துவிலும், பகுத்து நிச்சயிக்கிற புத்தி சித் தத்திலு மொடுங்க, சித்த முதலிய விரண்டும் அவற்றைப் பிரேரிக்கிற விந்துநாதங்களும் அவற்றிற் குப் பிராணனாகிய ஆதி பரை யென்னு மிரண்டு சத்தி களுடனுந் துரியாவத்தைத் தானமாகிய புருவமத்தி

யிலே நின்று, தேகேந்திரிய அந்தக்கரண வியாபார மொன்று மற்றுக் கேவல ஞானமாத்திரமாயிருப்பது நின்மல துரியம்.

நின்மல துரியாவத்தைக்குக் காரணமான விந்துவும் அர்த்த நாதமுங் குடிலையிலும், சித்தம் பிரகிருதியிலும், ஆதிசத்தி பராசத்தியிலு மொடுங்க, நின்மல துரியாதீதாவத்தைக்குக் காரணமாகிய அநாதி நாத மென்னும் பராசத்தியுஞ் சிவானந்தானுபவியாகிய சொரூபஞானமாகிய வுள்ளமும் அடங்க, நின்மல துரியாதீத அவத்தைக்குத் தானமாகிய பிரமாந்திரத்திலே அகண்டாகார சச்சிதானந்த பரிபூரண சிவானந்தானு போகத்தை இரண்டறப் பெற்றிருப்பது நின்மலதுரியாதீதம். இதுவே, உன்மனைக்கு மேற்பட்டிருக்கிற மோக்ஷம்.

இந்த நின்மல சாக்கிராதீதத்தைப் பெறவே நிவிர்த்தி முதலான பஞ்சகலைகளும், அன்னமய முதலான பஞ்சகோசங்களும், சிகாராதி சூக்குமபஞ்சாக்ஷரமும், நகாராதி தூலபஞ்சாக்ஷரமும், சத்தியோசாதாதி பஞ்ச மந்திரங்களும், பிரமாமுதலான பஞ்சகர்த்தாக்களும், சுத்தவித்தைமுதலான பஞ்சதத்துவங்களும், உள்ளத்துடன் மனமுதலான அந்தக்கரணங்கள் ஐந்தும், வைகரி முதலான வாக்குகள் ஐந்தும், கிரியாசத்தி முதலான பஞ்சசத்திகளும், ஆணவாதி பஞ்சபாசங்களுஞ் சர்வ உபாதிகளும் நீங்கும்.

இவ்வாறு நின்மலதுரியாதீதாவத்தையை ஒரு பசுக் கறக்கிற நேரமாயினும், வில்லம்பு பூமியில் விழுகிற

நேரமாயினும், கண்ணிமை பொருந்து நேரமாயினும் பெற்றவர் பூமியின் மீளப் பிறவார். இவ்வாறு நிட்டை கூடியவர்க்கு விதிநிடேத புண்ணியபாவ மொன்று மில்லை. இவர்செய்த புண்ணியபாவம் இவர்க்கிதாகிதஞ் செய்பவரைச் சாரும். இவ்வாறு நின்மலசாக்கிராதி அனுபவித்துக்கொண்டு சீவன்முத்தராயிருந்து தேகாந்தியத்திலே பரமோட்சத்தை யடைவர்.

இனி, பர மதத்தை நிராகரியாதிருக்கிற் றன்மதம் பிரதிட்டையாகாதென்கிற நியாயத்தாற் பராது மோக்ஷத்தை நிராகரித்துச் சித்தாந்த முத்தி சொரூபங் கூறுவாம்.

சாருவாகர் முதலானவர்கள் தங்கள் தங்கள் புத்திக்குத் தக்கதாக வெவ்வேறு மோக்ஷம் நிரூபிப்பார்கள். சௌத்திராந்திகர் சகல துக்கங்களுக்குங் காரணமாயிருக்கிற தேகமென்கிற அவாவிடயநாசமே பரமுத்தியென்றும், பௌத்தரிலே சிலர் உபத்திரவ மற்றிருக்கிற சித்தசந்ததியே மோக்ஷமென்றும், சிலர் சித்தசந்தான மற்றுப்போவதே பரமமோக்ஷமென்றும்; ஆருகதர் எப்போது மேலே போகிறதே பரம மோக்ஷமென்றும் ; சாங்கியர் பிரகிருதியின் விகாரங்களுடைய வியாபாரமற்றவளவிற் புருடனுக்குச்சொரூபமாயிருக்கிறதே பரமமோக்ஷமென்றுங் கூறுவர்.

யோகர் சாத்துவிகமாயிருக்கிற பிரகிருதி யோகமே பரம மோக்ஷமென்றும் ; பத்தர்கள் சிலர் கணபதி, இந்திரன், சூரியன், பிரமா, விட்டுணு, ருத்திர னிவர்களுடைய சாலோக்கிய சாமீப்பிய சாரூப்

பிய சாயுச்சியமே பரமமோக்ஷமென்றும்; சிலர் சீவான்மா பரமான்மாவிலே லயிக்கிறதே பரம மோக்ஷமென்றும்; நையாயிகர் அத்தியந்தமான துக்க மற்றுப்போகிறதே பரம மோக்ஷமென்றும்; பாட்டா சார சமயிகள் நித்தியமான சுகம் விளங்குவதே பரம மோக்ஷமென்றுஞ் சொல்வர் சிலர் முத்தியிலே ஆன்மாக்களுக்கெல்லாங் கிரியாசத்தி விளங்குகிறதே யன்றிக் கிருத்தியம் பண்ணுகிறது முண்டு; சிவன் தனக்கொத்திருக்கிற முத்தான்மாவிலே சகத் துண்டாக்குகிறது கூடும்; மறைகையினலே கர்த்தாவல்ல வாகையாற் கர்த்தாவாயிருக்கிற சிவனைக் காட்டினும் அதிக கிருத்தியம் பண்ணுகிறது பரம மோக்ஷ மென்றுஞ் சொல்வர். சிலர் சர்வஞ்ஞனுயிருக்கிற ஈசுரனைக் காட்டிலு முத்தனுக் காதிக்க மிருக்கப்பெற்றுச் சர்வ கர்த்தாவாயுஞ் சர்வஞ்ஞனுயுமிருக்கிற சிவனுடனே சரியாயிருக்கிறது முத்தியென்றுஞ் சொல்வர்.

இன்னுஞ் சாமீப்பியத்தை நான்காகச் சொல்வாரு முண்டு. எவ்வாறெனில்; பாசுபதர்கள் ஈசுரனிடத்தி லேயிருக்கிற சர்வஞ்ஞத்துவம் ஆன்மாவினிடத்திலே சங்கிரமிருக்கிறது பரம மோக்ஷமாமென்றும்; மகா விரதர் தமக்கு அப்போது சர்வஞ்ஞத்துவமுண்டா கிறது பரம மோக்ஷமென்றும்; காபாலர் சர்வஞ்ஞனுகை யின் சமாவேசமே பரம மோக்ஷமென்றும்; சைவ ஏகதேசிகள் சத்தியமாய் மலத்திலே ஆவரிக்கப்பட்டி ருக்கிறதினுற் சர்வஞ்ஞனுகைக்குஞ் சர்வகர்த்தாவாகைக் குந் தடையான மலம் போய் விளங்குகிறதே பரமமோக்ஷ மென்றும்; மாயாவாதிகள் அநிர்வசனீய

மான அவித்தியா நிவிர்த்தியினால் ஆநந்தத்தைப் பெறு தலே பரம மோக்ஷமென்றுங் கூறுவர். இவை யெல்லாம் பரமமோக்ஷமல்ல.

சரீரநாசம், சித்தசந்தானங்கெடுதல், சீவலயம், சொரூபாவத்தானம், அத்தியந்த துக்கங் கெடுதல் இவை பரமபுருடார்த்தமல்ல. அறியப்படாதது புருடார்த்தமல்லாதது ஆகையால் அறிகிறவனே யில் லாத சரீரநாசம், சித்தசந்தானங்கெடுதல், சீவலய மென்னு மூன்றும் புருடார்த்தமாகா. மற்றைச்சொரூ பாவத்தான முதலிய இரண்டினும் அறிகிறது கூடா திருக்கையால், அவையும் புருடார்த்தமாகா. காணபத் தியங் கூறும் சாரூப்பியாதிகள் புராணங்களினு மாகமங்களினு மோக்ஷமென்று சொல்லப்பட்டாலும், சரீரபந்தமுண்மையால் அஃது உள்ளபொழுது துக்க முதலானவையும் அவசியம் வேண்டுகையால், அச் சரீ ரங் காரியமாகையால், அவசியங் கெடுதல் கூடுகை யால், முத்தனுக்குத் திரும்பச் சென்மம் வர்த்திக்கை யால், திரும்பச் செனியாதிருக்கிற பரமபுருடார்த்த மான பரமமோக்ஷமாகை கூடாது. குணமுத்தியாதல் கூடுமாகையினால் அதுவும், எப்பொழுதும் ஊர்த்துவ கமனஞ் சாத்தியமாயிருக்கிற பிரகிருதியோகமும் பரம மோக்ஷமாகை கூடாது, இவைகளிரண்டுஞ் சரீரமுண் டாகையால் முன்சொன்ன பக்ஷத்திலுள்ள தூடணங் கள் இவற்றிற்கும் வருகையால். அப்பிரமாணிய மாகை யினாலும் புருடனால் அபேக்ஷிக்கப்படாதிருக்கை யானும் பரம மோக்ஷமன்று. சிவனைக்காட்டினு

மதிகமாகை யொருகாலுங் கூடாதாகையாற் சீவா திக்யமும் பரமமோக்ஷ மன்று. சங்கிராந்த ரூப மாகிய சாம்மியஞ் சீவனிடத்தில் ஞானமில்லாமற் பண்ணுகையால் அதுவும் யோக்கியமன்று, ஆதலாற் பரமமோக்ஷமன்று. உற்பத்திசாம்மியமும் அநித்திய மாகத் தெரிகையாற் கூடாது, ஆகையால் பரம மோக்ஷமன்று. ஆவேசமான சாம்மியம் முத்தனு டைய ஞானத்தைத் தெரியாதபடி பண்ணுகையால் அபேக்ஷிக்கப்படா திருக்கையாற் பரமமோக்ஷமன்று; சைவ ஏகதேசிகள் சொல்லுகின்ற வேறே யொருபடித் தான சாம்மியம் ஏகதேசத்தில் ஒப்பாகி எல்லாருக்குஞ் சாதாரணமாகையாற் சாம்மியம் ரூபமன்று, எல்லாம் ஒன்றாயிருக்கிற முத்தியென்கிறதிற் சங்கையேயில்லை; நித்தியமான சுகம் விளங்குமென்கிற பக்ஷத்தில் விளங் குதலாவது ஆணவம் அபிபவப்படுவது மாத்திரமாகில் அப்போது நமது மதத்தைப் பிரவேசித்ததே; ஞானம், அப்போதாகில் அநாதியாகிற புருடார்த்தமன்று; உண்டாவதாகில் அநித்தியமாகும். அநிர்வச்னீயமான அவித்தையிற் பிரமாணமில்லாதிருக்கையால் மாயா வாதி சொல்லுகிற முத்தியும் பரமமோக்ஷமன்று. பின்னை, பரமமோக்ஷம் யாதெனில்: ஆவாரகமாயும் விட்சேபமாயுமிருக்கிற மலமாயாதிபாசக்ஷயத்தில் பர மானந்தமான சிவதாதான்மியத்தினுடைய அபிவியாப் தியே பரமமோக்ஷமாம்.

இனி: மோக்ஷசாதனம் ஞானம், பிரபத்தி, வைராக்கியமென மூன்று. இவற்றின் ஞானமாவது தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி; ஆன்ம

ரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி; சிவரூபம், சிவ தரிசனம், சிவயோகம், சிவபோகம் என்னுந் தசவிதத் தையுங் குருகடாக்ஷத்தினு லறிந்து அநந்நியமாயிருக் கையென வறிக.

இவ்வாறு கூடுவ தரிதாகில், எங்குஞ் சிவம் வியா பகமாயிருக்கிறதையும், அவனிடத்தில் எல்லாமிருக்கிற தையும், அவனருள்வழியானன்றி யொன்றுமினு மறி யாதென்பதையும் அறிந்து அவனேவற்படி செய் கிறே மென்று எல்லாப் போகத்தையுஞ் சிவார்ப்பணம் பண்ணி நாமொருவ னேவற்பணி செய்கையால் நமக் குப் புண்ணியபாவ மென்று தன்னைப் பின்னிட்டுச் சிவனை முன்னிட்டுக்கொண்டு அவனுடைய அதீனனு கிப் பஞ்சாக்கரத்தில் திரிபதார்த்தத்தினுண்மையை யறிந்து பாசத்தைக் கீழாக்கிப் பரசிவத்தை மேலாக்கி விதிப்படி யுச்சரித்துக்கொண்டு வாசனுக்ஷயம்பண்ணி விற்பன்னனுகி யிருப்பதாகப் பாவித்துத் தான் செய் கின்ற கிரமத்திலே முன்சொன்ன சிவானுபவங்கூடும்.

இதுவு மரிதாகில், குருலிங்கசங்கமத்தை வழிபட அஞ்ஞானம் போய்ச் சிவஞானம் பிரகாசித்து முன் சொன்ன சிவானுபவம் பெற்றிருப்பன்.

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்டதேசிகன் றிருவடி வாழ்க.

ஞானமிர்தக் கட்டளை முற்றிற்று.

பிழையும் திருத்தமும்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
௨	௧௮	இலயனென்றும், சத்தனென்றும்	சிவனென்றும், இலயனென்றும்
௫	௧௨	உத்யுக்தனாகிய சதாசிவனாயிருந்து	உத்யுக்தனாயிருந்து
,,	௧௯	பரமுத்தராகவும்	அபரமுத்தராகவும்
,,	௨௧	அந்தப் பரஞானத்தை	அந்த அபரஞானத்தை
	௨௮	தனுகரணாதிகளையுண்டாக்குவதும்	தனுகரணாதிகளையுமுண்டாக்குவதும்
௧௭	௧௬	சுத்தமுண்டாமாறு	சத்த முண்டாமாறு
௨௫	௧௪	தானங்களில் இந்திரியமில்லையென்க	தானங்கள் இந்திரியமல்லவென்க
,,	௨௰	செய்விக்குந்	செய்யுந்

சைவசித்தாந்த நூல்கள்